# <u>Constitution</u>

# யாப்பு

---

## Conseil Suisse de l'Eelam Tamoul (Swiss-CET)
## சுவிஸ் ஈழத்தமிழர் அவை

### 1. Chapitre / அத்தியாயம்
### Introduction / அறிமுகம்

Le Conseil est établi sur la base démocratique de la souche de la population de l'Eelam Tamoul habitant en Suisse. Le Conseil de l'Eelam Tamoul sera fonctionnel dans toute la Suisse. Le Conseil représente les intérêts de l'Eelam Tamoul au niveau national et international. Etant mandaté par le peuple, ce Conseil promouvra également les droits des tamouls de l'Eelam au Sri Lanka. Les activités du Conseil Suisse de l'Eelam Tamoul se tiendront strictement en respect avec les lois et les réglementations Suisse.

சுவிஸ் ஈழத்தமிழர் அவையானது சுவிஸ் வாழ் ஈழவம்சாவழித் தமிழர்களின் (சுவிஸ் ஈழத்தமிழர்) ஜனநாயகப் பங்களிப்புடன் அமைக்கப்பட்டுள்ளது. சுவிஸ் ஈழத்தமிழர் அவையானது சுவிஸ் பூராவும் இயங்கும். இவ் அவையானது சுவிஸ் வாழ் ஈழத்தமிழர்களின் விடயங்களை தேசிய மற்றும் சர்வதேசரீதியில் கையாள்வதுடன் தாயகத்திலுள்ள ஈழத்தமிழர்களின் உரிமைகளுக்காக ஆணை பெற்ற அவை என்ற வகையில் குரல் கொடுக்கும். சுவிஸ் ஈழத்தமிழர் அவையானது தனது பணிகளை சுவிஸ் நாட்டின் சட்டங்கள், கட்டுப்பாடுகள் மற்றும் நிஜமங்களை உள்ளடக்கியே முன்னெடுக்கும்.

### 2. Chapitre / அத்தியாயம்
### Objectifs principaux / அடிப்படை குறிக்கோள்கள்

#### 1. Article / விதி

**Jurisprudence de la diaspora tamoule vivant en Suisse :**
**சுவிஸ் வாழ் புலம் பெயர் தமிழர்கள் சார்ந்த விவகாரங்கள்**

Le Conseil Suisse de l'Eelam Tamoul est responsable de la vie sociale, économique et des affaires politiques intérieures de l'Eelam Tamoul en Suisse.

சுவிஸ் ஈழத்தமிழர் அவையானது சுவிஸ் வாழ் ஈழத்தமிழர்களின் சமூக, பொருளாதார, உள்நாட்டு அரசியல் நடவடிக்கைகளிற்கு பொறுப்பாகும்.

**Fondements :**
**அடிப்படைகள்:**

1) Promouvoir l'intégration des tamouls de l'Eelam dans la société suisse incluant une collaboration active avec tous les groupes ethniques en Suisse.

ஈழத்தமிழர்களின் சமூக இணைவாக்கத்தை சுவிஸ் சமுதாயத்தில் ஊக்குவித்தல். அதன் பொருள் சுவிஸ் சமூகத்திலுள்ள பிற இனத்தவர்களின் அமைப்புக்களுடனும் திட்டமிட்ட முறையில் சேர்ந்து செயற்படுதல்.

2) Expansion et encouragement à l’éducation

கல்வித்தகமையை விஸ்தரித்தலும் ஊக்குவித்தலும்.

3) Encourager une pratique de vie libre, à l’image de la Suisse, sur les bases de non discrimination d’opinion, de religion, de sexe, de race, de couleur et autres critères ethniques.

கருத்து, மதம், பால், இனம், நிறம் மற்றும் வேறெந்த அடக்குமுறை காரணிகளுமின்றி சுவிஸ் சமூகத்திலான வாழ்வுரிமையை ஊக்குவித்தல்

4) Promouvoir et encourager l’identité tamoule, telle que la langue, la culture et l‘histoire pour une cohabitation harmonieuse dans une Suisse multiculturelle.

தமிழரின் அடையாளங்களான மொழி, கலாச்சாரம் மற்றும் வரலாறு போன்றவற்றை ஊக்குவித்தபடி பல்லினகலாச்சார சுவிஸ் நாட்டில் சுமூகமான சகவாழ்வை இலகுவாக்குதல்.

5) Inciter les échanges d’opinions, les débats et les prises de décisions démocratiques dans la communauté de l’Eelam Tamoul en Suisse.

சுவிசில் ஈழத்தமிழரிடையே கருத்துப்பரிமாற்றம், விவாதஅரங்குகள், மற்றும் ஜனநாயக வழிமுறைகளை ஊக்குவித்தல்.

6) Encourager et guider les dialogues entre diverses associations & institutions des tamouls de l’Eelam en Suisse.

சுவிசிலுள்ள பிற ஈழத்தமிழர் அமைப்புக்களுடனான கருத்தாடலை மேற்கொள்ளுதலும் ஊக்குவித்தல்.

7) Mener un dialogue actif avec les partis politiques suisses tout en maintenant l’identité sociopolitique et culturelle des tamouls de l’Eelam.

சமூக-அரசியல் மற்றும் கலாச்சார அடையாளத்தை பேணியவாறு சுவிஸ் அரசியல் கட்சிகளுடனான கருத்தாடலை நடத்துதல்.

8) Créer un bureau avec ses propres ressources pour assurer le fonctionnement effectif du Conseil Suisse de l’Eelam Tamouls quant aux objectifs et principes susmentionnés.

முன்வைக்கப்பட்டுள்ள இலக்குகளை அதனது அடிப்படைகளிற்கிணங்க செயற்படுத்துவதற்கு சுவிஸ் ஈழத்தமிழர் அவைக்கென சுய பலத்தில் ஒரு

காரியாலயத்தை நிறுவுதல்.

**2. Article / விதி**
**Jurisprudence internationale de la diaspora tamoule :**
**புலம் பெயர் தமிழர்கள் சார்ந்த சர்வதேச விவகாரங்கள்**

Le Conseil Suisse de l'Eelam Tamouls exposera les problèmes collectifs à l'échelle internationale en collaboration avec d'autres associations tamoules.

சுவிஸ் ஈழத்தமிழர் அவையானது புலம் பெயர் தமிழர்கள் சார்ந்த பொதுவான பிரச்சனைகளை பிறநாட்டு ஈழத்தமிழர் அமைப்புக்களுடன் சேர்ந்து சர்வதேசமட்டத்தில் வெளிக்கொணரும்.

**Fondements :**
**அடிப்படைகள்:**

1) Déployer et renforcer les relations diplomatiques avec la Communauté Internationale.

   உலக சமூகத்துடனான இராஜதந்திர உறவுகளை உருவாக்குதலும் வலுப்படுத்துதலும்

2) Promouvoir la présence de la diaspora tamoule sur la scène internationale.

   உலக அரங்கில் புலம் பெயர் தமிழர்களின் பிரசன்னத்தை ஊக்குவித்தல்

3) Collaborer avec les organisations tamoules qui opèrent au niveau international, en tenant compte des principaux points soulevés dans l'Article III, paragraphe 9.

   உலக அரங்கில் செயற்படும் தமிழர் அமைப்புக்களுடனான ஒருங்கிணைந்த வேலைத்திட்டங்களை விதி 3, பிரிவு 9 யில் குறிப்பிட்ட வரையறைகளிற்கிணங்க முன்னெடுத்தல்

4) Le Conseil fournit des ressources humaines et financières disponibles pour promouvoir la coopération avec les organisations internationales gouvernementales et non gouvernementales, conformément à l'Agenda de l'Eelam Tamouls (AET)

   அவையானது சர்வதேச, அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுடனான ஒருங்கிணைந்த செயற்பாட்டின் மேம்பாட்டிற்கு அவையின் நிகழ்ச்சிநிரலின் பாற்பட்டு ஆளணி மற்றும் பொருளணியை வழங்கும்.

### 3. Article / Artikel / விதி

**Restauration d’un Etat indépendant et souverain de l’Eelam Tamouls**

**சுதந்திரமும் இறையாண்மையுமுள்ள தமிழீழ அரசிற்கான மீளுருவாக்கம்**

Le Conseil de l’Eelam Tamouls joindra ses efforts à la création de l’Etat indépendant et souverain de l’Eelam Tamouls dans la région du nord et de l’est (en contigüité) de l’île du Sri Lanka sur les bases sous citées.

சுவிஸ் ஈழத்தமிழர் அவையானது இலங்கைத்தீவின் தொடரறாத வடக்கு கிழக்கில் ஈழத்தமிழருக்கான சுதந்திரமும் இறையாண்மையுமுள்ள தமிழீழ அரசு உருவாவதற்கு பாடுபடும்

**Fondements :**

**அடிப்படைகள்:**

1) Le Conseil rédigera, dans le sens de l’intérêt national de l’Eelam Tamoul, un agenda (Eelam Tamoul Agenda ou AET).

   அவையானது ஈழத்தமிழரின் தேசிய நலனை கருத்தில் கொண்டு ஒரு வேலைத்திட்ட நிகழ்ச்சிநிரலை வகுத்துக்கொள்ளும்.

2) Les Tamouls de l’Eelam sont un peuple distinct sur l’île de Sri Lanka.

   இலங்கைத்தீவில் ஈழத்தமிழர்கள் ஒரு தனித்துவமான இனம்

3) En tant que peuple à part entière, les Tamouls de l’Eelam ont le droit absolu à l’autodétermination.

   தனித்துவமான இனம் என்ற அடிப்படையில் ஈழததமிழர்கள் முழுமையான சுயநிர்ணய உரிமை கொண்டவர்கள்

4) Les tamouls de l’Eelam ont le droit inaliénable et intrinsèque à leur territoire traditionnel dans le nord et l’est de l’île en contigüité du Sri Lanka.

   இலங்கைத்தீவின் தொடரறாத வடக்கு கிழக்கில் ஈழத்தமிழர்கள் மறுக்கமுடியாத தமது பாரம்பரிய தாயகத்திற்கான உரிமத்தை கொண்டுள்ளனர்.

5) Un Etat tamoul indépendant et souverain se doit d’être créer sur l’île du Sri Lanka compte tenu du fait que la Patrie tamoule n’a pas cédé sa souveraineté à l’administration central du gouvernement du Sri Lanka. Toutefois, cette décision ne s’opposera à aucune tentative future de faire valoir le droit absolu à l’autodétermination du peuple tamoul de l’Eelam.

   தமிழர் தாயகமானது தனது இறையாண்மையை இலங்கை அரசிடம் ஒருபோதும் கையளித்ததில்லை. அந்தவகையில் தமிழரின் இறையாண்மை தேசியஅரசின் மூலம் மீளுருவாக்கம் பெறவேண்டும். இருந்தும் இம்முடிவானது எதிர்காலத்தில் ஈழத்தமிழரின்

முழுமையான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான தீர்வு நோக்கிய முயற்சிகளுக்கு தடையாக அமையாது.

6) Encourager les démarches démocratiques et non-violentes pour conquérir l’Eelam Tamoul.

   தமிழீழத்தை அடைவதற்கான வன்முறையற்ற ஜனநாயக வழிகளை ஊக்குவித்தல்.

7) Agir en honorant les sacrifices immenses des civils et des combattants tamouls durant la lutte contre l’oppression.

   அடக்குமுறைக்கு எதிரான போரில் பொதுமக்கள் மற்றும் போராளிகள் செய்த அளப்பரிய அர்ப்பணிப்புக்களிற்கு மதிப்பளித்துச் செயற்படுதல்.

8) Le Conseil de l’Eelam Tamoul doit être reconnu pour le développement de l’Eelam Tamouls en tant qu’Etat ayant les qualités suivantes:

   ஈழத்தமிழரவை கீழ்வரும் அடிப்படைகளில் ஈழத்தமிழரின் தமிழீழ அரசிற்கான கட்டுமான பணிகளை அங்கீகரிக்க வேண்டும்

   a) Laïcité, — மதசார்பற்ற,
   b) Démocratie directe, — நேரடி ஜனநாயக,
   c) Egalité, — சமதர்ம,
   d) Primauté du droit, — சட்டவாட்சியை காக்கின்ற.

9) Ne pas côtoyer de groupes ou partis approuvant les actes militaires oppressants les tamouls et les lois draconiennes.

   சிறிலங்காவில் மனிதவிரோத சட்டங்களையும் தமிழர்கள் மீதான இராணுவ அடக்குமுறையை ஆதரிக்கின்ற குழுக்கள் மற்றும் கட்சிகளில் இருந்து விலகி நிற்றல்.

10) Le Conseil Suisse de l’Eelam Tamouls reconnaît et promeut les symboles nationaux et souverains de l’Eelam Tamoul.

   சுவிஸ் ஈழத்தமிழர் அவையானது ஈழத்தமிழரின் தேசிய சின்னங்களை ஏற்று ஊக்குவிக்கும்.

Le Conseil est déterminé à veiller à ce que la Communauté Internationale reconnaisse et accepte l’Etat de l’Eelam Tamoul. Il s’engage à déployer tous les moyens pour contrer les tentatives de découragement à l’acquisition de l’autodétermination.

சுவிஸ் ஈழத்தமிழர் அவையானது சர்வதேச சமூகம் தமிழீழ தேசத்தை அங்கீகரிக்கவும் ஏற்க செய்யவும் திடசங்கற்பம் பூண்டு நிற்பதுடன் அவர்களது சுயநிர்ணயஉரிமைக்கோரிக்கையை கைவிட கோரும் முயற்சிகளை உறுதியாக எதிர்க்கும்.

# Constitution

## யாப்பு

---

**Acceptation de la Constitution**

Nom:

Prénom :……………………………………………………………………………………………………………………..

Date de naissance :………………………………………………………………………………………………………….

Adresse : ……………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………

Je soussigné(e) ________________________________________, certifie, par ma signature, avoir pris connaissance des termes de la Constitution du Conseil Suisse de l'Eelam Tamoul et être en accord avec cette dernière.

Date Signature

---

**ஒப்புதல் வாக்குமூலம்**

குடும்பப்பெயர், முதற்பெயர்: ………………………………………………………………………………………

பிறந்ததிகதி: ………………………………………………………………………………………

விலாசம்: ………………………………………………………………………………………

………………………………………………………………………………………

எனது கையெழுத்தின் மூலம் மேலுள்ள யாப்பை கருத்தில் எடுத்துள்ளேன் என்றும் அதனது உள்ளடக்கத்தை ஏற்றுக்கொள்கின்றேன் என்றும் உறுதியளிக்கின்றேன்.

____________________ ____________________________________________

திகதி கையெழுத்து